கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனி கேள்வி வேண்டும்.

பெருமுக்கல் அருகில் பஸ் விபத்து

* **154 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 28—1—1966 பகல் மரக்காணத்திலிருந்து திண்டிவனம் நோக்கி வந்துகொண்டிருந்த பிரயாணி பஸ் ஒன்று பெருமுக்கல் ஏரியில் கவிழ்ந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes. On 28th January 1966, a passenger bus proceeding from Marakanam to Tindivanam, dashed against the iron railings on the laked bund of the Perumukkal lake and fell into the lake;

(*b*) The accident was considered to be due to the sudden breakage of the front right side main rod spring at the forward anchor bed of the bus.

திரு. ஆ. தங்கவேலு : *இந்த பஸ் கவிழ்ந்ததால் ஆபத்து ஏற்பட்ட பிரயாணிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டதா ? எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 2,500 ரூபாய் நஷ்ட ஈடு கோரப்பட்டிருக்கிறது. அது முடிவாகவில்லை. இன்ஷூரன்ஸ் கம்பெனியில் இருந்து பஸ் சொந்தக்காரருக்கு 5,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : *ஏரிக்கரைக்கு மேல் போகிற பஸ் ரோட்டில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்த ரோடை வேறுவிதமாகத் திருப்பி விடுவதற்கு வாய்ப்பு வசதியில்லை. அது குறித்து பரிசீலிப்பார்களா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

Sub-Inspectors of Police.

* **155** *Q.*—SRI V. SANKARAN : SRI A. THANGAVELU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Police Stations not having Sub-Inspectors to man them, in each of the three Police ranges in the State respectively; and

(*b*) the time expected to take, to provide the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is no Police Station in this State without a Sub-Inspector.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : சப் இன்ஸ்பெக்டர்கள் பொதுவாக நம் மாநிலத்தில் தேவைக்குக் குறைவாக இருக்கிறுர்கள் என்பது உண்மையா ? அதை டி.ஐ.ஜி. அறிக்கையில் வெளியிட்டிருக்கிருர்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வாப்பட்டதா ?

கனம் திரு. பூ. கக்கன் : மேலும் மேலும் சப் இன்ஸ்பெக்டர்களை ரெக்ரூட் செய்ய ஏற்பாடு செய்து வருகிருர்கள். ஆகவே, இனி மேல் ரெக்ரூட்டட் சப்-இன்ஸ்பெக்டர்கள் இல்லை என்ற குறை இருக்காது.

* 156 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை ஆஃப் டூட்டி எடுத்துக்கொள்ளலாம் என்ற விதியிருக்கிறதா?

(இ) ஆமெனில், அவ்வாறு வாரத்திற்கு ஓர்முறை எடுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில் அவர்களுக்கு பிரத்தியேக ரெமுனரேஷன் கொடுக்கப்படுகிறதா ?

(உ) ஆமெனில் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : போலீஸ்காரர்களுக்கு எப்போதுமே வாரத்திற்கு ஒரு முறை ஆஃப் ட்யூட்டி என்று இருக்கிறது. அது சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இல்லை என்று சொல்கிருர்கள். ஆஃப் ட்யூட்டியில் வேலை செய்கிற அன்று சர்க்காரிலிருந்து கொடுக்கப்படுகிற டி.எ. க்ளெயிம் செய்கிருர்கள். க்ளெயிம் செய்கிற படி அவர்களுக்கு கிரமப்படி கிடைக்க வேண்டியதாகும். ஆகவே, அப்படி வேலை செய்கிற தினங்களில் அந்த டி.எ. யோடு, ஆஃப் ட்யூட்டி க்ளெயிம் செய்யக் கூடாது என்ருல் அதற்கான ரெம்யூனரேஷனையும் சேர்த்து க்ளெயிம் செய்யலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : 1953-ல் பரிசீலனை செய்து கான்ஸ்டேபிள்ஸ், ஹெட் கான்ஸ்டேபிள்ஸ் இவர்களுக்குத்தான் ஆஃப் ட்யூட்டி கொடுக்கவேண்டும், சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இல்லை என்று முடிவு செய்திருக்கிருர்கள்.

வானூர், மரக்காணம் யூனியன்களுக்கிடையிலுள்ள கழுவெளி

* 157 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னுர்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் உள்ள வானூர் யூனியனுக்கும், மரக்காணம் யூனியனுக்கும் மத்தியிலுள்ள கழுவெளியின் விஸ்தீரணம் என்ன ?